**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF JUDGE.**
**KANNIYAKUMARI AT NAGERCOIL.**
**O.S. NO.73/2023**

Deposition of the witness: PW2.
Date : 21.08.2026

Solemnly affirmed by Mrs. R. Sathya Bench Clerk in accordance with the provision of Act X of 1873.

| | |
|---|---|
| Name | விஜயராகவன் |
| Father's Name | மேகநாதன் |
| Village | பால்கிணற்றான் விளை |
| Taluk | அகஸ்தீஸ்வரம் |
| Calling | தனியார் நிறுவனம் |
| Age | 44 |

**1,2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. எனது அப்பாவும், நானும் புதுக்குடியிருப்பு ஊரில் வரிதாரர்களாக இல்லை என்றால் சரிதான். எனது தகப்பனார் தற்போது உயிருடன் இல்லை. 2012 ல் இறந்தார். எனது சகோதரர்கள் இருவர் புதுக்குடியிருப்பு ஊர் நிர்வாகத்தில் நிர்வாகிகளாக இருந்தது இல்லை என்றால் சரிதான். நானும் எனது சகோதரர்களும் தாவா கோவில் நிர்வாகிகளாக இருந்தது இல்லை. எனது அப்பா 2001 ம் ஆண்டு வாசாஆ 3 நன்கொடை பத்திரம் எழுதி கொடுத்திருப்பதில் நானும், எனது சகோதரர்களும் 8,9, 10 நபர்களாக கோவில் நிர்வாகிகளாக மேற்படி ஆவணத்தில் சொல்லியிருக்கிறார் என்றால் சரிதான். என்னையும், எனது சகோதரர்களையும் வாசாஆ 3 ஆவணத்தில் தர்ம சாஸ்தா கோவிலின் தற்காலிக நிர்வாகிகள் என குறிப்பிட்டு இருக்கிறார் என்றால் சரிதான்.

2. ஐயா சாமி முத்துப்பாண்டியன் என்பவர் எனது அக்கா தங்கம் என்பவரின் கணவர். என்

தகப்பனார் வாசாஆ 3 ஆவணத்தை எழுதி தரும்போது புதுக்குடியிருப்பு ஊர் நிர்வாகத்தின் கீழ் இருந்து வரும் தர்ம சாஸ்தா கோவில் என்று சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. அந்த ஆவணத்தில் ஊர் பெயர் குறிப்பிட்டு கோவில் என்று போட்டுள்ளார். எனது தகப்பனார் நன்கொடையாக கொடுத்த இடம் கோவிலை சுற்றி மேற்கு, தெற்கு, கிழக்கு ஆகிய பக்கங்களில் இருக்கிறது.

3. சுடலை மாடன் கோவிலும், பிள்ளையார் கோவிலும் தர்ம சாஸ்தா கோவிலுக்கு வடக்கு பக்கம் இருக்கிறது என்றால் சரியல்ல. பிள்ளையார் கோவில் கன்னி மூலையில் தெற்கு பக்கம் இருக்கிறது. சுடலை மாடன் சாமி கோவில் வடகிழக்கு பக்கம் ஈசானி மூலையில் இருக்கிறது. நாகராஜர் கோவில் தர்ம சாஸ்தா கோவிலின் வடமேற்கு மூலையில் இருக்கிறது. தர்ம சாஸ்தா கோவிலின் வடக்கு பக்கம் நிறைய இடமும் அதை தாண்டி வடக்கு பக்கம் நீரோடை இருக்கிறது என்றால் சரிதான். அதனால் என் தகப்பனார் நன்கொடையாக கொடுத்த இடம் கோவிலின் வடக்கு, வடமேற்கு பகுதியில் வராது என்றால் அது பற்றி தெரியாது.

4. எனது தகப்பனாரின் பூர்விகம் பூச்சிவிளாகம் கிராமம் என்றால் சரிதான். எனது தாயாரின் ஊர் சாமியார் மடம். என் தகப்பனாரின் சொந்த சொத்தை நன்கொடையாக கொடுத்ததாக தான் வாசாஆ 3 ஆவணத்தில் சொல்லியுள்ளார் என்றால் சரிதான். பத்மநாபபுரம் குமாரப்பிள்ளை என்பவரை தெரியுமா என்றால் கேள்வி பட்டிருக்கிறேன். நேரடியாக தெரியாது. குமாரப்பிள்ளை குடும்பம் பத்மநாபபுரம் கோட்டைக்குள் இருக்கும் பாலசுப்ரமணிய சுவாமி கோவிலின் நிர்வாகிகளாக இருந்தார் என்றால் அது பற்றி தெரியாது. அந்த பாலசுப்ரமணிய கோவிலின் சொத்துதான் வாசாஆ 3 ஆவணத்தின் நன்கொடையாக கொடுத்த இடத்தை சேர்த்து 8 ஏக்கர் என்றால் அது பற்றி தெரியாது.

5. அந்த குமாரப்பிள்ளை எனது தகப்பனாருக்கு அதிகார ஆவணம் எழுதி கொடுத்து

விலைக்கு கொடுக்க சொல்லியிருந்தார் என்றால் அது பற்றி தெரியாது. மேற்படி 8 ஏக்கரில் எங்கள் குடும்ப கைவசம் எத்தனை ஏக்கர் உள்ளது என்றால் தெரியாது. என் தகப்பனார் யார், யாருக்கு என்னென்ன சொத்துகள் கொடுத்தார் என்பது தெரியாது என்றால் நேரடியாக தெரியாது. பிற்பாடு தெரிந்து கொண்டேன்.

6. தர்ம சாஸ்தா கோவிலுக்கு நாங்கள் வரி கொடுப்பதில்லை. நன்கொடை கொடுக்கிறோம். சாமி குட்டி நாடார் மகன் மகாலிங்கத்தை எனக்கு தெரியுமா என்றால் ஊரில் மகாலிங்கம் என்று ஒருவர் உண்டு. அவரது தகப்பனார் பெயர் தெரியாது. இன்று நீதிமன்றத்தில் ஆஜர் ஆகியிருக்கும் 2 ம் பிரதிவாதி நாகராஜன், அவரது மகன் என்றால் சரிதான். செல்லநாடார் என்பவர் எந்த ஊரை சேர்ந்தவர் என்று தெரியாது. வாசாஆ 3 ஆவணபடி நான் நிர்வாகியாக தாவா கோவிலில் இருந்தது உண்டா என்றால் இல்லை.

7. அதனால் வாசாஆ 3 ஆவணம் தவறான சங்கதிகள் உள்ளது என்றால் சரியல்ல. என் தகப்பனார் நன்கொடை கொடுத்ததால் அவரது பிள்ளைகள் பெயரை தற்காலிக நிர்வாகிகள் என்று சேர்த்துள்ளார்கள். நான் HDB நிறுவனத்தில் பணியாற்றுகிறேன். மேற்படி நிறுவனத்தில் கடந்த 2 வருடமாக பணியாற்றுகிறேன். அதற்கு முன்னால் கட்டுமான தொழில் மற்றும் HDFC நிறுவனத்தில் பணியாற்றினேன். நான் தொழிலில் நஷ்டமாகி கடன் வாங்கி சில காலம் சென்னையில் இருந்தேன் என்றால் சரியல்ல.

8. இந்த கோவிலை யார், யார் எப்போது, நிர்வாகம் செய்து வந்தார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். ஊர் சார்பாக திருவிழா நடத்தும் போது அவர்கள் என்னிடம் நோட்டீஸ் தருவார்கள் . நான் நன்கொடை தருவேன். நான் கடந்த வருடம் நன்கொடை ரூ.1000 கொடுத்தேன். அதற்கு முந்தைய வருடம் கொடுத்தது ஞாபகம் இல்லை. 2022 ம் ஆண்டு கொடுத்தேனா என்றால் தெரியவில்லை. புதுக்குடியிருப்பு ஊர் நிர்வாகம் என்பது எந்த ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது என்றால் தெரியாது.

9. தர்ம சாஸ்தா கோவில் எத்தனை ஆண்டுகளாக இருக்கிறது என்றால் தெரியாது. சிறு வயதில் இருந்தே கோவிலுக்கு சென்று வருகிறேன். தர்ம சாஸ்தா கோவில் சுமார் 100, 200 ஆண்டுகள் பழைமையானது என்றால் இருக்கலாம். புதுக்குடியிருப்பு ஊரில் எப்போது, யார், யார் குடியிருக்கிறார் என்றால் தெரியாது. புதுக்குடியிருப்பு ஊரில் பலரும் வெளியூரிலிருந்து வந்து வீடு கட்டி வாழ்ந்து வருகிறார்கள் என்று நிருபண வாக்குமூலத்தில் சொல்லியிருப்பது யூகத்தின் அடிப்படையில் என்றால் எனது அப்பா கிரயம் கொடுத்த நபர்களில் பலர் வெளியூரிலிருந்து வந்து குடியேறினார்கள் அதன் அடிப்படையில் சொன்னேன்.

10. இரத்தின பாண்டியன், துரைச்சாமி நாடார் குடும்ப பூர்விகம் பக்கத்தில் கிடங்கன் கரை விளை என்றால் அது பற்றி தெரியாது . புதுக்குடியிருப்பு ஊரில் ஏறத்தாழ அனைவரும் வெளியூரிர் இருந்து குடியிருப்பவர்கள் என்றால் தெரியாது. நிருபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள வழக்கு விவரம் எனக்கு யார் சொன்னது என்றால் ஊர் தலைவர் காமராஜ் சொன்னார். தர்ம சாஸ்தா கோவில் நிர்வாகம் முன் காலங்களில் எப்படி நடந்தது என்பது எனக்கு தெரியுமா என்றால் நேரடியாக தெரியாது. என் தகப்பனார், ஊர்க்காரர்கள் நடத்துவார்கள் என்று கூறியிருக்கிறார்.

11. கோவிலில் உள்ள பழைமையான கல்வெட்டு எந்த வருடம், தேதி என்றால் தெரியாது. என் தகப்பனார் நன்கொடை கொடுத்த கல்வெட்டு இருக்கிறது. கோவிலில் வேறு எத்னை கல்வெட்டு இருக்கிறது தெரியுமா என்றால் தெரியாது. கோவிலின் புகைப்படத்தை காட்டினால் என்னால் சொல்ல முடியுமா என்றால் முடியும். தற்போது என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ளது தர்ம சாஸ்தா கோவிலின் மண்டபம் மற்றும் முகப்பு பகுதி என்றால் சரிதான். அது பிவாசாஆ .7 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்கண்ட பிவாசா ஆ 7 புகைப்படத்தில் கல்வெட்டு முகப்பு பகுதி தெரிகிறது என்றால் சரிதான். அதற்கு வடக்கு பக்கம் பகுதியில் தான் இசக்கியம்மன் கோவில் இருக்கிறது என்றால் சரிதான்.

என்னிடம் தற்போது காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள பகுதி, ஆற்றங்கரைக்கு அருகில் கோவிலுக்கு வடக்கே உள்ளது என்றால் சரிதான். அந்த புகைப்படத்திலும் கல்வெட்டுக்ள் இருக்கிறது என்றால் சரிதான்.

12. அதில் நிர்வாகஸ்தர்கள் பெயர் மற்றும் திருக்கோவில் போர்டு உள்ளது என்றால் அந்த புகைப்படத்தில் பிளக்ஸ் இருக்கிறது. அதிலுள்ள எழுத்துக்கள் தெரியவில்லை. மேற்படி புகைப்படம் பிவாசாஆ 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பிவாசாஆ 8 புகைப்படத்தில் என்ன எழுத்து உள்ளது என்றால் அந்த பிளக்ஸை நான் கோவிலுக்கு சென்ற போது பார்க்கவில்லை. என்னிடம் தற்போது காட்டப்படும் புகைப்படத்தில் உள்ளது சுடலை மாடன் கோவில் என்றால் சரிதான். அது தர்ம சாஸ்தா கோவிலின் வடகிழக்கு மூலையில் உள்ளது அந்த புகைப்படம் பிவாசாஆ 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் கடைசியாக திருவிழா சமயத்தில் கோவிலுக்கு சென்றேன். நான் அந்த கோவிலின் மீது அக்கறை உள்ள நபர் என்றால் சரிதான்.

13. அந்த கோவிலின் நிர்வாகம் சம்மந்தமாக வழக்கு நடைபெற்று வருவது சுமார் 1 வருடத்திற்கு முன்னால் தெரியும். நான் மேற்படி வழக்கு தொடர்பாக மத்தியஸ்தம் பேச முயற்சி மேற்கொண்டேனா என்றால் இல்லை. தற்போது என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் பிவாசாஆ 7 மற்றும் 8 ல் சிசிடிவி இருக்கிறதா என்றால் இருக்கிறது. நான் கோவிலில் பார்த்த ஞாபகம் இல்லை. வழக்கின் பிரதிவாதிகள் கோபாலகிருஷ்ணன், நாகராஜன், கண்ணன் ஆகியோரை தெரியும். 2 ம் வாதி காமராஜை தெரியும். காமராஜ் எனது உறவினர்.

14. பிரதிவாதிகள் கோபாலகிருஷ்ணன், கண்ணன் ஆகியோர் வெளியூரில் இருந்து தாவா ஊருக்கு குடியேறினார்கள் என்றால் சரிதான். கோபாலகிருஷ்ணன் இருப்பது என் தகப்பனார் கிரயம் கொடுத்த இடத்தில் இல்லை. கோபாலகிருஷ்ணன் தற்போது

கல்லூரியில் விரிவுரையாளராக இருக்கிறார். கோபாலகிருஷ்ணன் அப்பா கூலி வேலை செய்தவர் என்றால் சரியல்ல. எனக்கு தெரிந்து அவர் தேங்காய் வியாபாரம் செய்தார். பிரதிவாதிகள் அடுத்தவர் தோட்டத்தில் குடியிருந்து வந்த நபர்கள் என்றால் சரிதான். கோபாலகிருஷ்ணன் தகப்பனார் பெயர் தங்கப்பன் ஆகும்.

15. சாமி குட்டி நாடார், சிவலிங்க நாடார், தங்கப்பன் ஆகிய மூவரும் தான் 1992 க்கு முன்பிருந்தே பராமரித்து வந்தார்கள் என்றால் சரியல்ல. ஊர் நிர்வாகம் தான் பராமரித்து வந்தார்கள். ஊர் நிர்வாகம் என்பது ஒரு சமுதாயம் சார்ந்ததா அல்லது அனைத்து மக்களும் சேர்ந்ததா என்றால் அது பற்றி தெரியாது. நான் காமராஜ் உறவினர் என்பதால் 1995 ம் ஆண்டு உருவாக்கப்பட்ட ஊர் நிர்வாகம் என்பது 1992 ம் ஆண்டு காலத்திலும், இருந்ததாகவும் கோவிலை நிர்வாகம் செய்ததாகவும் விவரம் தெரிந்த காலத்தில் இருந்து ஊர் நிர்வாகம் கோவில் நிர்வாகத்தை பார்த்து வந்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.